# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.24/2024 நாள் : 08.03.2024**

**<u>மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (08.03.2024) ரூ.1675 கோடி மதிப்பீட்டில் மணலி, மாதவரம், இராயபுரம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்</u>.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (08.03.2024) சென்னை கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் ரூ.1675 கோடி மதிப்பீட்டில் மணலி, மாதவரம், இராயபுரம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

<u>இந்நிகழ்வில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது.</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் ஏற்படுத்துவதற்கான பல்வேறு நிலையிலான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகர பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 1050 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்றுவரும் பகுதிகள், அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு

லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கான நடைமுறைகள் சீர் செய்யப்பட்டு தற்போது பொதுமக்களின் தேவைக்கேற்ப லாரிகள் மூலம் குடிநீர் தினசரி வழங்கப்படுகிறது. அதனடிப்படையில், 37 நீர் நிரப்பும் நிலையங்கள் முலம் 440 லாரிகள் மூலம் 917 தெரு நடைகள், 8,753 குடிநீர் தொட்டிகளுக்கு தினசரி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கட்டண அடிப்படையிலான நுகர்வோர்களுக்கு 850 நடைகள் வழ்ங்கப்படுகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 2100 லாரி நடைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இணையதளம் மூலமாக குடிநீர் லாரிகள் பதிவு செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படையில் நாளொன்றுக்கு சராசரியாக 950 நடைகள் வழங்கப்படுகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் 27,650 நடைகள் இணையதளம் வாயிலாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக குடிநீர் தேவைப்படும் பட்சத்தில் எவ்வித தொய்வுமின்றி லாரிகள் மூலம் வழங்குவதற்கு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 33 மாதங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1326.90 கோடி மதிப்பீட்டில் 37 குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 9 இலட்சத்து 70 ஆயிரத்து 219 பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர். மேலும், ரூ.890.36 கோடி மதிப்பீட்டில் 19 எண்ணிக்கையிலான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 21 இலட்சத்து 78 ஆயிரத்து 400 பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

பெருநகர சென்னையின் வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களுக்கு குடிநீர் / கழிவுநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கதாக ரூ.175.82 கோடி மதிப்பீட்டில் 5 எண்ணிக்கையிலான குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் 2 இலட்சத்து 48 ஆயிரத்து 790 பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

மேலும், ரூ.2721.67 கோடி மதிப்பீட்டில் 23 எண்ணிக்கையிலான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் 9 இலட்சத்து 19 ஆயிரத்து 525 பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு 6 ஏரிகள் மற்றும் 2 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு சென்னை மாநகர பகுதி முழுவதும் 1050 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை மாநகரின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்காக 22.08.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேரூரில் ரூபாய் 4276.44 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 400 MLD உற்பத்தி திறன் கொண்ட தெற்காசியாவிலேயே மிகப்பெரிய கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ரூ.1516 கோடி மதிப்பீட்டில் நெம்மேலியில் 150 MLD உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் 24.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் 9 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

பெருநகர சென்னையின் வளர்ச்சிக்கேற்பவும், பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து உட்கட்டமைப்பு பணிகளும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் குடிநீர் இணைப்புகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வழங்கல் பணிகள் எவ்வித இடையூறுமின்றி வழங்கப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகள் அலுவலர்களால் எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கோடை காலத்தில் எந்தப் பகுதியிலும் குடிநீர் வழங்கலில் பிரச்சனை ஏதும் ஏற்படாதவாறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏரிகளில் போதிய அளவு நீர் இருப்பதாலும், 3 கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள் மூலம் 350 MLD குடிநீர் கிடைக்கப் பெறுவதாலும் குடிநீர் வழங்கலில் எவ்வித தடங்கலும் இல்லாமல் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள், ONGC நிறுவனத்தின் சார்பில் பெரு நிறுவனங்களின் சமுதாய மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டிலான கழிவுநீர் கசடுகள் அகற்றும் 3 ரோபோ இயந்திரங்கள் சென்னை குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வியந்திரங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில்

ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் புதிய 3 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ரோபோ இயந்திரங்கள் பொருத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இவ்வாகனங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன்,இ.ஆ.ப., நிலைக்குழு தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, அண்ணா நகர் மண்டலக் குழுத்தலைவர் திரு.கு.பி.ஜெயின் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater